**(Under Section.173 BNSS)**

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102176

1. District : Coimbatore
மாவட்டம்
PS: V&AC CBE
காவல்நிலையம்
Year: 2025
ஆண்டு
FIR No.: 02/AC/CB
மு.த.அ. எண்
Date: 24.02.2025 15.45hrs
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as — Sections பிரிவுகள்: 7 (b)
(ii) Act சட்டம்: amended in 2018 — Sections பிரிவுகள்: –
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: –
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 6.2.2025
நாள் முதல்
Date to : 24.02.2025
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 24.2.2025
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 1520 hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) GD vol-I 24.2.2025
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 1520 hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral : Written - Computer Typed Tamil
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 4.5 Km South east
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : O/o Assistant Engineer TANGEDCO Rathinapuri, Coimbatore
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P.Rajkumar
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Perumal
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 48 | 2025
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Photography
தொழில்
(g) Address : D No: 294, Lenin Nagar, 3rd Street Sanganoor Main Road, Ganapathy Coimbatore.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Haroon, Foreman, TANGEDCO, Rathinapuri Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 24/2/25

Signature of the Officer in-charge, Police Station [signature] 24/02/25
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.2.2025 1615 hrs

Name: பெயர் D. SHEELA
Rank: நிலை ......................No. எண் ..........
Inspector of police
V/4 AC Coimbatore

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2025/ AC/CB, u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

இன்று 24.02.2025-ம் தேதி திங்கட்கிழமை மதியம் 15.20 மணிக்கு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர், கணபதி, சங்கனூர் மெயின் ரோடு, க.எண் 294, லெனின் நகர் 3 வது தெரு என்ற முகவரியில் வசித்தவரும் திரு.பெருமாள் என்பவரது மகன் திரு.P.ராஜ்குமார் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு கையொப்பமிட்ட புகாரை என்னிடம் கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P.ராஜ்குமார், த/பெ.பெருமாள், க.எண் 294, லெனின் நகர் 3 வது தெரு, சங்கனூர் மெயின் ரோடு, கணபதி, கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, கோயம்புத்தூர். ஐயா, நான் கோவை, கணபதி, சங்கனூர் மெயின் ரோடு, லெனின் நகரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் RK Photography என்ற பெயரில் சங்கனூர் மெயின் ரோட்டில் ஸ்டுடியோ அலுவலகம் வைத்து, கடந்த 23 வருடங்களாக தொழில் நடத்தி வருகிறேன். நான் மேற்படி முகவரியில் புதிதாக கட்டியுள்ள வீட்டின் மனையிடத்தை கடந்த 2023 ஆம் வருடம் நவம்பர் மாதம் வாங்கினேன். மேற்படி இடத்தில் தரைத்தளத்தில் கார்பார்கிங் மற்றும் எனது ஸ்டுடியோ அலுவலகமும், முதல் தளத்தில் 3 படுக்கை அறைகள் கொண்ட ஒரு வீடும், இரண்டாம் தளத்தில் 3 வீடுகளும் மற்றும் மூன்றாம் தளத்தில் 2 வீடுகள் கட்டி முடித்து, கடந்த 2024 ஆம் வருடம் நவம்பர் 8-ல் வீடு கிரக பிரவேசம் செய்து குடியேறினேன். இதற்கு தற்காலிக மின் இணைப்பு பெற்று, கட்டிட வேலை முடிந்த பிறகு வீட்டு மின் இணைப்பாக கடந்த ஜனவரி 2025-ல் மாற்றினேன். மேலும் எனது வீட்டில் கீழ் தளத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு (Commercial Line) மின் இணைப்பு வேண்டியும், இரண்டு மற்றும் மூன்றாம் தளத்தில் உள்ள 5 வீட்டிற்கு Domestic Line மின் இணைப்பு வேண்டியும்

ரத்தினபுரியில் உள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று கேட்ட போது, போர்மேன்னை பார்க்க சொன்னார்கள். அதன்பேரில் நான் போர்மேன் திரு.ஹாரூன் அவரை சந்தித்து கேட்டபோது அவர் என்னிடம் கோவை ஜெராக்ஸ் கடைக்கு சென்று, ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்து அரசு கட்டணம் செலுத்த சொன்னார். அதனை தொடர்ந்து 04.02.2025 ஆம் தேதி நான் போர்மேன் அவர்கள் கூறிய கோவை ஜெராக்ஸ் கடைக்கு சென்று, 5 புதிய வீட்டு மின் இணைப்பும் 1 அலுவலக பயண்பாட்டுக்கு மின் இணைப்பும் சேர்த்து 6 மின் இணைப்பு பெற விண்ணப்பித்தேன். கோவை ஜெராக்ஸ் கடையின் மூலமாக அதற்குண்டான பணம் ரூ.30030/-ஐ ஆன்லைன் மூலமாக 06.02.2025 ஆம் தேதி செலுத்தி ரசீது பெற்றேன். பணம் செலுத்திய விவரத்தை போர்மேன்க்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்தேன். அப்போது அவர் மின்வாரிய அலுவலகத்தில் நேரடியாக அரசு கட்டணம் ரூ.10,950/- செலுத்த வேண்டும் என்றும், அலுவலகத்திலிருக்கும் அனைவருக்கும் தனிதனியாக பணம் தரவேண்டியுள்ளதால் ஒரு கனெக்சனுக்கு ரூ.5,000/- வீதம் 6 புதிய கனெக்சன் கொடுப்பதற்கு மொத்தமாக ரூ.30,000/- கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். பின்பு போர்மேன் சொன்னபடி மறுநாள் 07.02.2025 ஆம் தேதி மின்வாரிய அலுவலகத்தில் நேரடியாக பணம் செலுத்த போனபோது போர்மேன் அவர்கள் அலுவலகத்ததில் இல்லை, பின்பு அங்கிருந்த கவுண்டரில் பணம் ரூ.10,950/- செலுத்தினேன். மேற்படி பணம் செலுத்திய விவரத்தினை எனது செல்போன் 9585594496 எண்ணிலிருந்து போர்மேன்னுடைய செல்போன் 9003536400 எண்ணுக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்து, மீட்டர் எப்போது வரும் என்று கேட்டேன். அதற்கு அவர் திங்கட்கிழமை வந்துவிடும் என்று கூறினார் பிறகு நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன். அவர் சொன்னதுபோலவே திங்கட்கிழமை 5 மீட்டர் பாக்ஸ் வந்து மாட்டினார்கள். கமர்சியல் சர்வீஷ்க்கு என்று ரூ.13300/- செலுத்த சொன்னதின் பேரில் 12.02.2025 ஆம் தேதி மீண்டும் பணம் செலுத்தினேன். அன்றைய தினமே மதியம் சுமார் 15.00 மணியளவில் எனது வீட்டிற்கு கமர்சியல் சர்வீஷ் மின் இணைப்பு மீட்டர் பாக்ஸ் மாட்டுவதற்கு போர்மேன் அவர்களுடன் இருக்கும் இரண்டு நபர்கள் வந்து மாட்டிவிட்டு, போர்மேன் ஏற்கனவே என்னிடம்

கேட்டிருந்த பணம் ரூ.30,000/- வாங்கி வர சொன்னார் என்று கூறினார்கள். நான் அங்கிருந்து எனது செல்போன் 9585594496 எண்ணிலிருந்து போர்மேன்னுடைய செல்போன் 9003536400 எண்ணுக்கு தொடர்பு கொண்டு கேட்க அதற்கு அவர் மத்த இடத்துல எல்லாம் ஒரு 3 Phase லைன்னுக்கு ரூ.10,000/- முதல் ரூ.15,000/- வரையும் 1 Phase லைன்னுக்கு ரூ.7,000/- முதல் ரூ.8,000/- வரை வாங்குவார்கள் நான் உங்களுக்கு அப்படி ஏதும் கேட்கல கம்மியா தான் கேட்குறேன் என்று கூறினார். நான் பணம் ரெடி செய்துவிட்டு கூப்பிடுவதாக தெரிவித்தேன். பின்பு மீட்டர் பாக்ஸ் மாட்ட வந்த இரண்டு நபர்களிடம் அவரிடம் கால் பண்ணி கொஞ்சம் கம்மி பண்ண சொல்லுங்கள் என்று கூறினேன், அதில் இருந்த ஒருவர் போர்மேன் அவர்களுக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு பேசிவிட்டு என்னிடம் வந்து போர்மேன் ரூ.30,000/- தான் வேண்டும் என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டதாக கூறினார். பின்பு அவர்களிடம் பணம் ரெடி செய்துவிட்டு கூப்பிடுவதாக சொல்லி அனுப்பி வைத்தேன். பின்பு இரண்டு நாட்கள் கழித்து 14.02.2025 ஆம் தேதி போர்மேனுடன் இருக்கு நபர் 8870339413 எண்ணிலிருந்து எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு பணம் ரெடியாகிவிட்டதா, போர்மேன் வாங்கி வர சொன்னார் என்று கூறினார். பணம் இன்னும் ரெடியாகவில்லை, பணம் ரெடி செய்து விட்டு கூப்பிடுவதாக கூறி போனை வைத்துவிட்டேன். அன்றைய தினமே நான் எனது செல்போன் 9585594496 எண்ணிலிருந்து போர்மேன்னுடைய செல்போன் 9003536400 எண்ணுக்கு தொடர்பு கொண்டு, பணம் இன்னும் ரெடியாகவில்லை என்றும் கொஞ்சம் சிரமமாக உள்ளது என்றும் தெரிவித்தேன். மேலும் அவர் தொடர்ந்து பணம் கேட்பதால், வேறு வழியில்லாமல் ரூ.10,000/- தரட்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் தவணை முறையில் வேண்டாம், எல்லாருக்கும் தரவேண்டும், மொத்தமாக கொடுங்கள் என்று கேட்டார். நான் அவரிடம் இரண்டு நாட்கள் காலஅவகாசம் கொடுங்கள் என்றும், கொஞ்சம் குறைத்து கம்மி பண்ணி சொல்லுங்கள் என்றும் கேட்டேன். மேலும் AE அவர்களை நேரில் சென்று பார்த்தால் ஏதாவது கம்மி பண்ணுவார்களா என்று கேட்டேன். அதற்கு அவர் அதெல்லாம் வேணாம், பாத்துக்கலாம், உங்களால எவ்வளவு

முடியுமோ பாருங்க என்று சொன்னார். என்னால் ரூ.15,000/- தான் கொடுக்க முடியும் என்று தெரிவித்தேன். அதற்கு அவர் பாத்துகலாம் வாங்க, பையன்கள் மறுபடியும் போன் செய்தால் போர்மேனிடம் பேசிட்டேன் இனி கூப்பிட வேண்டாம் என்று சொல்லுமாறு சொல்லி போனை வைத்துவிட்டார். பின்னர் 21.02.2025 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் போர்மேன் அவரது செல்போன் 9003536400 எண்ணிலிருந்து எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டார். அப்போது நான் வேலையில் இருந்ததால் போனை எடுக்கவில்லை. பின்பு சுமார் 11.00 மணியளவில் எனது வேலைய முடித்துவிட்டு போர்மேனுக்கு செல்போனில் தொடர்பு கொண்டேன். அப்போது போர்மேன் என்னிடம் என்ன மறந்துட்டீங்களா என்று கேட்கதான் கூப்பிட்டேன் என்றார், அதற்கு நான் இரண்டு நாட்கள் முகூர்த்த நாள் என்பதாலும் மொத்த பணம் கேட்டதால் என்னால் கொடுக்க முடியவில்லை லேட் ஆகிறது என்று போர்மேனிடம் தெரிவித்து, அவர் தொடர்ந்து பணம் கேட்டு பேசுவதால், வேறு வழியில்லாமல் நான் எவ்வளவு பணம் தரவேண்டும் என்று கேட்டேன். நீங்க ரெடி பண்ணுங்க பையன எங்க வர சொல்லனும் சொல்லுங்க வர சொல்றேன் என்றும், எல்லாருக்கும் பணம் தரவேண்டியிருக்கு என்றும் கேட்டார். அவர் கேட்டதால் நான் ரூ.15,000/- தருகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.18,000/-மாவது தாங்க, ரூ.18,000/- னா ஒரு சர்வீஷ் கனெக்சனுக்கு ரூ.3,000/- போட்டா, ஆறு மூனு பதினெட்டு என்றும் அப்பவும் ஒரு சர்வீஸ்கு ரூ.600/- பத்தாது அதை நான் பண்ணி கொடுத்திடறேன் என்றும், எல்லாத்துக்கும் ஒரு லிமிடேஜ் இருக்கு ஒரு சர்வீஸ்க்கு இவ்வளவுன்னு இருக்கு, எல்லாருக்கும் தரவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் சரி எப்ப வந்தா பாக்கலாம் என்று கேட்டேன். அதற்கு அவர் நான் அனுப்பி வைக்கும் பையன்கிட்ட கொடுத்தா போதும், அவனே கொடுத்துடுவான் எல்லாம் பார்த்துக்குவான், எப்ப வர சொல்லனும் சொல்லுங்க நான் வர சொல்றேன் என்றும், நான் இரண்டு நாள் லீவு என்றும் கூறினார். நான் சரிங்க சார் பார்த்துட்டு கூப்பிடரேன் என்று போனை வைத்துவிட்டேன். இன்று காலை சுமார் 07.30 மணியளவில் போர்மேன் திரு.ஹாரூன் அவர்களுடன் இருக்கும் நபருடைய செல்போன் 8870339413 எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு கால்

வந்தது, நான் குழந்தையை பள்ளிக்கு அழைத்து சென்று கொண்டிருந்ததால் போன் காலை எடுக்கவில்லை. சுமார் 07.45 மணியளவில் எனது குழந்தையை பள்ளியில் விட்டுவிட்டு வீட்டிற்கு திரும்ப வந்தபோது எனது வீட்டில் போர்மேன் திரு.ஹாரூன் அவர்கள் சொல்லி ஏற்கனவே எனது வீட்டிற்கு வந்த நபர் எனது வருகைக்காக காத்திருந்தார். என்னை பார்த்ததும் போர்மேன் திரு.ஹாரூன் ஏற்கனவே என்னிடம் கேட்டபணம் ரெடியா இருந்தால் வாங்கிவிட்டு வர தன்னை அனுப்பினார் என்று சொன்னார். நான் அவரிடம் பணம் இன்னும் ரெடியாகவில்லை, மாலைக்குள் பணம் ரெடி செய்துவிட்டு சொல்கிறேன் என்று சொன்னேன். பிறகு நான் யோசித்து பார்த்தேன் எனது வீட்டிற்கு மின் இணைப்புகள் கொடுத்தற்காக போர்மேன் கேட்ட லஞ்சம் ரூ.18,000/-யை தர எனக்கு விருப்பமில்லை. லஞ்சம் கேட்கும் போர்மேன் திரு.ஹாரூன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், நானும் போர்மேன் திரு.ஹாரூன், அவர்களும் 21.02.2025 தேதி செல்போனில் பேசிய உரையாடல்களை ரெக்கார்டு செய்து வைத்திருந்ததை Pendrive-ல் காப்பி செய்து தங்களுக்கு இத்துடன் இனைத்து நடவடிக்கைகாக சமர்ப்பிக்கிறேன். இப்படிக்கு sd/-(xxxx) (P.ராஜ்குமார்). நான் அப்புகாரினை படித்துப்பார்த்தேன். மேலும் வாதியானவர் தனது புகார் மனுவுடன் சமர்ப்பித்த Pendrive-ல் உள்ளடங்கிய உரையாடல் பதிவுகள் கொண்ட Audio file-ஐ கணினியில் போட்டு கேட்டுப் பார்த்ததில் இருந்தும், மேற்படி புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், மேலும் எதிரியின் செயல்பாடுகள் குறித்து விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் ஏதுமில்லை என்பதும் தெரியவந்தது. எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 24.02.2025-ம் தேதி 15.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2025/AC/CB, u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி

மேற்படி எதிரி திரு.ஹாரூன் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு மற்றும் 63 (4)(C) OF B.S.A-2023 சான்றுடன் கூடிய Pen drive with Hash Value report ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், இதனிடையே வாதி தனது புகார் மனுவுடன் சமாப்பித்த Pendrive-ல் உள்ளடங்கிய உரையாடல் பதிவுகள் கொண்ட Audio file-ஐ வழக்கின் விசாரணைக்காக மற்றொரு DVD-R-ல் முறைப்படி காப்பி செய்தும் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

24/02/25

(D.ஷீலா),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.